2006 ஜனவரி 17]

மூலமாகத் தமிழை அறிய முடிகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவேதான், அரசு இதற்கு 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மென்பொருள் குறித்த விவரங்களை மொழியாக்கம் செய்து, திண்டுக்கல் துரைப்பாண்டியன் என்கின்ற இளைஞர் குறுந்தகடாக வெளியிட்டிருக்கிறார். மதுரை பத்திரிகையாளர் கழகம் அதனைப் பாராட்டி வெளியீடு செய்திருக்கிறது. இதுபோன்ற இளைஞர்களுடைய முயற்சிக்கு ஊக்கம் தருவதற்கான சிறப்புத் திட்டம் உண்டா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அவர்களை ஊக்கப்படுத்தும். அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை அணுகினால், அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

4—

நியாய விலைக் கடை

***5446—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் சில நியாய விலைக் கடைகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ள கடைகளைப் பிரித்துத் தனியாக நியாய விலைக் கடையை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப

அட்டைகளுடன் செயல்படும் நியாய விலைக் கடைகளைப் பிரிப்பது குறித்து மனுக்கள் வருமானால், மனுக்களின் தேவைக்கேற்றவாறும், மக்களின் தேவைக்கேற்றவாறும் பரிசீலிக்கப்படும் என்ற பதிலினைச் சொல்லி அமர்கிறேன்.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத தேசத்திலேயே நியாய விலைக் கடைகளில் உள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தரமிக்க ரேஷன் அரிசி, ஒரு கிலோவிற்கு ரூ.3.50 பைசாவிற்கு வழங்குகின்ற எங்களுடைய பாரதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். எனது தொகுதியான பேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகள் உள்ள ரேஷன் கடைகள் சில பகுதிகளிலே செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. சில பகுதிகளில் அமைந்துள்ள ரேஷன் கடைகளுக்கு நெடுந்தூரத்திலேயிருந்து ஏழையெளிய மக்கள், பல பகுதிகளிலிருந்து வருகை தந்து, ரேஷன் பொருட்களை வாங்கி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் அவருடைய பதிலுரையிலே, விண்ணப்பம் வருகின்றபோது அது பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியினுடைய காலக்கட்டத்திலே திருக்கோயில்கள், தர்காக்கள், தேவாலயங்கள் உட்பட அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் அன்னதானத் திட்டம் அறிவிக்கப்பட்டு, தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தப் பெருமக்களுக்கெல்லாம் ஒரு நேரம் வயிறார உண்ண உணவு கொடுத்து வரும் எங்களது அன்னமிட்ட தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களுடைய சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.